Registered as a NewsPaper


விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

புக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-15 | 31-08-2005 | புதன் கிழமை | ஓசை-195



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12429) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## கிரிமிச்சையில் இராணுவ சீருடை தரித்த ஆயுதக்குழு தாக்குதல் போராளி வீரச்சாவு; பொதுமக்கள் உட்பட மூவர் படுகாயம்!

### தாக்குதலை நடத்தியோர் இராணுவ முகாமுக்குள் தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பிரதேசத்திலுள்ள கிரிமிச்சை சந்தியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் 500மீற்றர் அத்துமீறி நுழைந்த இராணு வத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் போராளி ஒருவர் வீரச்சாவைத்தழு வினார்.

இத்தாக்குதலில் இரண்டு பொதுமக்களும் போராளி ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இந்த ஆயுதக்குழுவினர் தாக்குதலை நடத்திவிட்டு அருகில் உள்ள சிறிலங்கா இராணுவத்தின் பனிச்சங்கேணி முகாமுக்குள் பதுங்கிக்கொண்டதை மக்கள் பலர் கண்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து தமிழ்நெட் இணையத் தளத்திற்கு கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் காலை 10 மணிக்கு இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்திற்கு சனாதிபதித் தேர்தல் ஊறு விளைவிக்கலாம்!

### - நெதர்லாந்து ஊடகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சனாதிபதித் தேர்தல் காரணமாக போர் நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்திற்கு பாதிப்பு ஏற்படலாம் என நெதர்லாந்து ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பிரதான கட்சிகளின் கவனம் அனைத்தும் அந்தத் தேர்தலின் பால் ஈர்க்கப்பட்டுள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

நோர்வேயின் ஏற்பாட்டாளர் ஊடாக அண்மையில் போர் நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்து இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.எனினும் இடையில் சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் அது பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவே நெதர்லாந்து ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவுக்கு இராணுவ ஒத்துழைப்பு வழங்க சீன அரசாங்கம் தயார்!

### சந்திரிகாவிடம் சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

*சிறிலங்காவுக்கு முழுமையான இராணுவ ஒத்துழைப்புக்களை வழங்க சீனா தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. சிறிலங்கா சனாதிபதியுடனான சந்திப்பின்போதே சீனப்பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

சீனப்பாதுகாப்புத்துறை அமைச்சர் காழகாங்சூனை சீனா சென்றுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது சிறிலங்கா இராணுவத்திற்கு முழுமையான இராணுவ ஒத்துழைப்பை அளிக்கவும் சீனா-சிறிலங்கா இடையேயான புதிய இராணுவ உடன்பாட்டுக்குத் தயாராக இருப்பதாகவும் சீன அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கடந்த 48 ஆண்டுகளாக சீனா-சிறிலங்கா இடையே அரசியல் மற்றும் இராணுவ நல்லுறவுகள் தொடர்ந்து பேணப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

தாய்வான் மற்றும் திபெத் உள்ளிட்ட பிரச்சினைகளில் சீனாவை சிறிலங்காஆதரிப்பதையும் சீன அமைச் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் -கூட்டமைப்பினர் அடுத்தவாரம் சந்திப்பு

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிற்குமிடையே அடுத்தவாரம் சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது சமகால அரசியல் நிலைமைகள், நகர்வுகள் தொடர்பாக ஆராயப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்புத் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கையில்;

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை பற்றியும் தற்போது தென் பகுதியில் நிலவுகின்ற அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிராமியப்படை பயிற்சியை முடித்து ஒரு தொகுதியினர் வெளியேற்றம்

(திருமலை)

திருமலை மூதூர் பகுதி மக்களில் ஒரு தொகுதியினர் கிராமியப் படை பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர்.

இப்பயிற்சி நெறி நிறைவு நிகழ்வானது நேற்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

(கொழும்பு)

சுடர்ஒளி ஊடகவியலாளர்கள் இருவர் கொழும்பில் வைத்து நேற்று தாக்கப்பட்டுள்ளனர்.

ஆறுமுகம் வரதராஜா மற்றும் புத்திரசிகாமணி ஆகியோரே தாக்குதலுக்குள்ளானவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்றைய தினம் செய்தி சேகரிக்க பாராளுமன்றத்திற்குச் சென்று விட்டு அலுவலகத்திற்கு வந்த பின்னர் வீட்டிற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெவ்வேறு சம்பவங்களில் ஒன்பது போராளிகள் வீரச்சாவு

வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த ஒன்பது போராளிகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவைவருமாறு:-

01.08.1997 அன்று வன்னி மாவட்ட ஓமந்தைப் பகுதியில் முன்னேறி நிலைகொண்ட ஜயசிக்குறு இராணுவத்தினரின் முகாம் தாக்குதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

● வீரவேங்கை கேசகப்பிரியன் (தர்மபாலன் அருமத்துரை, அம்பிலாந்துறை, குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

யாழ். மாவட்ட அரியாலைப்பகுதியில் சூரியக்கதிர் நடவடிக்கைக்கு எதிரான தாக்குதலில் விழுப்புண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய எழுச்சி பிரகடன விழிப்புணர்வு செயற்பாடுகளில் மாணவர்கள் தீவிர பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நாளை நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனத்தையொட்டி தமிழ் தேசிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், மற்றும் பொது அமைப்புக்களால் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

நேற்றைய தினம் கிளிநொச்சி பிரதேச பாடசாலை மாணவர்களால்

(12ஆம் பக்கம் பார்க்க)



## முன்னாள் இராணுவச் சிப்பாய் கொழும்பில் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் உந்துருளியில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் ஹிம்புலன்ன பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச்சாரதி வசந்தகுமார என அடையாளம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.9 வீதியூடான போக்குவரத்து சிலமணிநேரம் தடைப்படும்!

நாளை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் பெருமளவில் மக்கள் கலந்துகொள்ளவுள்ளதால் அன்றைய தினம் பகல் 12.00 மணிமுதல் கிளிநொச்சி நகரம் மற்றும் ஏ.9பிரதான வீதியில் மக்கள் கூட்டம்அதிகரிப்பதற்கான வாய்ப்பேற்படவுள்ளது. இதன்காரணமாக அன்றையதினம் பகல் 12.00 மணிக்குப் பின்பாக கிளிநொச்சி நகரம் மற்றும் அண்டிய பகுதிகளில் ஏ.9 வீதியூடாகப் போக்குவரத்துக்கள் யாவும் நடைபெறமாட்டாதெனவும் இதன்காரணமாக அன்றைய தினம் பகல் 12.00 மணிக்கு பின்பாக கிளிநொச்சியூடாக பயணங்களை மேற்கொள்பவர்கள் அதற்கமைவாக தமது பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வண்ணம் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன செயலணிக்குழுவினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

வரிவிளம்பரம்

**விற்பனைக்குண்டு**

எம்மிடம் ஐஸ்பழ பாத்,கிறீம் மோட்டார், குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு அமுதசுரபி குளிர்பருகை நிலையம், 497 யாழ்சாலை, கிளிநொச்சி. (6677)


## வீடுகள் அமைப்பு

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நான்கு கிராமங்களில் வீடுகள் கட்டும் வேலைத் திட்டம் வேள் விஷன் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதில் முதற்கட்டமாக நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான இடத்தினை துப்புரவு செய்யும் பணி இடம் பெற்று வருகின்றது.கள்ளப்பாடு தெற்கு, வட்டுவாகல், கோயில் குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் மேற்கிலுள்ள சாளம்பன் ஆகிய கிராமங்களிலேயே இவ் வீடுகளை கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)


## தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனம்

**எதிர் வரும் 01.09.2005 அன்று நடைபெறவிருக்கும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் அனைத்து மக்களையும் அணிதிரண்டு எமது உரிமைக் குரல் கொடுத்து தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்.**

தகவல்:-
கிராம அபிவிருத்தி சங்கத்தினரும்,
மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரும்,
கட்டைக்காடு மேற்கு,
பெரியகுளம்.

(சி.6678)



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

(01) வணிக மாணி பகுதி I-2002
(02) வணிக மாணி பகுதி II-2002
(03) வணிக மாணி பகுதி III-2002

மேற்படி பரீட்சைகளை 19.09.2005 (திங்கட்கிழமை) தொடக்கம் 03.10.2005 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(01) வணிக மாணி பகுதி I -2002 (19.09.2005 -26.09.2005)
(02) வணிக மாணி பகுதி II-2002 (19.09.2005 -24.09.2005)
(03) வணிக மாணி பகுதி III-2002 (26.09.2005 -03.10.2005)

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் வணிக மாணி பகுதி -I மற்றும் பகுதி-IIற்கு தோற்றுபவர்கள் 14.09.2005 தொடக்கமும் வணிக மாணி பகுதி-IIIற்கு தோற்றுபவர்கள் 21.09.2005 தொடக்கமும் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்

பதிவாளர்
30.08.2005

(சி.12653)



## REQUEST FOR PROPOSAL

**Construction of medical shelters**

**Closing Date:**05 of September 2005 **/10.00 hrs am**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies willing to contract for the building of Medical shelters in Mullaitivu District (villages of Annamal Kovil, Valayarmadam Church, Sabaratnam Thoddam, Unnapulavu).

The project should start by **08th September 2005.**

### 1. Bill of Quantities

4 Semi- permanent Medical Shelters / Dimensions 30 X 20 Feet

| | |
|---|---|
| Walls : | 7 feet high concrete block-work |
| Pillars: | 9 pillars / height 7 feet / width: 8 inch |
| Windows : | 2 windows , 3 X 3 feet |
| Doors : | 1 wooden door, single side opening / 3 X 6 feet |
| Floor: | Concrete floor / 30 X 20 feet/ plastered |
| Roofing: | Kadjan |

### 2. Structure & Detail of the Proposal

a) Material: Detailed listing and quantification (both in volume & unit price) required
b) Labour: Separate listing and quantification (both in volume & unitprice)
c) Indication of project start & end dates
d) Indication of payment terms & warranty

Specific details of the project, including diagrammatic representation are available on request at the ICRC office in Kilinochchi.
The projects will be carried out under the strict supervision of the ICRC.

Interested Companies and individuals are invited to submit their bids in a **sealed envelope** (open envelopes shall not be considered at all) until 05th of September 2005 10.00 AM to the following address:

**nternational Committee of the Red Cross**
**Subdelegation Kilinochchi**
**Logistics Department**
**Iranamadu Junction**
**Kilinochchi**
**Phone ++94 712 375 697**

(சி.12651)




# அமெரிக்காவை தாக்கிய "கற்றினா" சூறாவளி

# 55 பேர் பலி; ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவை தாக்கிய ''கற்றினா'' சூறாவளிக்கு 55 பேர் பலியாகியும் பலர் படுகாயமடைந்தும் உள்ளனர். மணிக்கு 170 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததுடன் இலட்சக்கணக்கானோர் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.**



மெச்சிக்கோ கடற் பகுதியில் உருவான கற்றினா புயல் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை தாக்கியது. இதில் ஒன்பது பேர் பலியானார்கள். புளோரிடாவில் பெரும் சேதத்தை ஏற்படுத்திய. இந்தப் புயலுக்கு கற்றினா என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப்புயல் நேற்று முன்தினம் லூசியானா மாகாணத்தையும் தாக்கியது . அதை அடுத்து மிசுசிப்பி, அலபாமா மாநிலங்களையும் பலமாகத்தாக்கியது.

மணிக்கு 170 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளிக் காற்று சுழன்று அடித்ததாகவும். லூசியானாவில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு கடல் நீர் ஏராளமாக நகருக்குள் புகுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலத்த காற்று வீசியதால் வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

பலத்த மழையிலும் சூறாவளி. காற்றிலும் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்தன. ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள்.

வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட கார்களையும் புயற் காற்று தூக்கி வீசியது.

நியூமெக்சிக்கோ, மிசுசிப்பி, அலபாமா ஆகிய மாநிலங்களை பேரழிவு பகுதிகளாக ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

இந்த மூன்று மாநிலங்களிலும் விமானப் போக்குவரத்து அடியோடு நிறுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்தப்புயல் காரணமாக இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் கல்ப் போர்ட்டில் கற்றினா சூறாவளி தாக்கிய நிலையில் பெரும் வெள்ளத்தில் மூழ்கிய வீட்டிலி ருநது குழந்தைகளையும் மூதாட்டி ஒருவரையும்பழைய படகு ஒன்றில் மீட்கும் பணியாளர்கள்



சூறாவளி தாக்கிய நியூ ஓர்லியன்ஸ் கையாட் நகரில் சிதைவடைந்த கட்டடத் தில் அமெரிக்க தேசியக் கொடியை ஏந்தி நிற்கும் அமெரிக்கர் ஒருவர்.

## தாய்வானில் பலத்த சூறாவளி அபாயம் மக்களுக்கு அந்நாட்டு அரசு எச்சரிக்கை

தாய்வானில் பலத்த சூறாவளியான "தளீம்'' வலுவடைந்து இத்தீவை நோக்கி நகர்ந்து வருவதால் தாய்வான் அரசு கடல் எச்சரிக்கை அறிவித்தலை விடுத்துள்ளது இந்தச் சூறாவளி இதேவேகத்துடன் தொடர்ந்து நகருமானால் தாய்வானில் மேற்குக் கரையை இன்றோ அல்லது நாளையோ தாக்கலாம் என அவ் எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வான், ஜப்பான், பிலிப்பைன்ஸ், ஹொங்கொங் மற்றும் தெற்குத் தாய்வான் ஆகிய இடங்களை சூறாவளிக்காற்று அடிக்கடி தாக்குகின்றன.

2001ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான தோறாஜி சூறாவளிக் காற்றில் 200 பேர் கொல்லப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



முன்னர் காஸாவில் குடியிருந்த ஒஸ்கட்மனும் அவரது மகள் றியுட்டும் தமது வீடு புல்டோசர் ஒன்றின் மூலம் இடிக்கப்படுவதை அவதானிக்கின்றனர்.

## தீவிரவாதிகள் பற்றிய தகவல் பரிமாற்றம் சார்க் அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு

(காத்மண்டு)

தெற்காசியாவில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை பரிமாறிக்கொள்ள வேண்டும் என்று சார்க் நாடுகளின் தகவல் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளில் தகவல் துறை அமைச்சர்களின் இரண்டு நாள் மாநாடு நேபாள தலைநகர் காத்மண்டுவில் நேற்று முன்தினம் தொடங்கியது. நேபாளத்தில் அனைத்து அதிகாரங் களையும் மன்னார் ஞானேந்திரா கைப்பற்றிய பின் அங்கு சர்வதேச அளவிலான மாநாடு ஒன்று நடப்பது இதுவே முதல் முறை


மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் ஜெய்பால் ரெட்டி மற்றும் நேபாளம், பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களும் பங்கேற்றனர். மாநாட்டில் நேபாள தகவல்துறை அமைச்சர் டங்கா தகால் பேசுகை யில், சார்க் உறுப்பு நாடுகளில் தீவிரவாதமே முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதை அடியோடு களைய நாம் அனைவரும் பரஸ்பரம் தீவிர வாதிகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். வளர்ச்சிப்பணிகள் குறித்தான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் தெற்காசியப்பகுதியில் நிலவிவரும் வறுமையை விரட்டலாம் என்றார்.

சார்க்உறுப்பு நாடுகளின் தகவல் துறை அமைச்சர்களின் மாநாடு நடப்பது இது ஐந்தாவது முறை. ஊடகம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறையிலுள்ளபிரச்சினைகள் குறித்து ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி அதன் அறிக்கையை நவம்பரில் டுனீஸ் நகரில் நடக்கும் உலக மாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டும் அறிக்கை தயார்செய்வது குறித்து மாநாட்டில் ஆலோசனை செய்யப் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

## ஈரான் நீதிபதி சுட்டுக்கொலை

(தெஹ்றான்)

ஈரான் நீதிபதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நீதிபதியின் பெயர் முகமது ரெசா ஆகாசாதேக் எனத்தெரிவிக் கப்படுகிறது. இவர் தெஹ்றானிவிலுள்ள தன் வட்டில் இருந்தபோது அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக்கொல்லப பட்டுள்ளார்.



ஆபிரிக்க வம்சாவளியினர் குடியிருந்த பரிஸ் நகர குடியிருப்பு ஒன்று தீ விபத்துக்குள்ளாகி மூன்று நாட்களில் மேலும் ஒரு இடத்தில் கடந்த 29 ஆம் திகதி ஏற்பட்ட தீயை அணைக்க முயலும் தீயணைப்புப் படை வீரர்கள்

## அணுவிஞ்ஞானி காதிர்கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்க பாக். மறுப்பு

(இஸ்லாமபாத்)

கள்ளச் சந்தையில் அணுவாயுத தொழில் நுட்பத்தை விற்ற அணு விஞ்ஞானி அப்துல்காதிர்கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடியாது என்று பாகிஸ்தான் மறுத் துள்ளது.

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப் பதற்கு காரணமாக இருந்த அணுவிஞ் ஞானி அப்துல்காதிர்கான். இவர் ஈரான், வடகொரியா ஆகிய நாடு களுக்கு அணுவாயுதத் தொழில்நுட் பங்களை விற்றது கண்டுபிடிக் கப்பட்டது. அவரை விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் கோரிவருகின்றன.

இந்தக் கோரிக்கையை ஏற்க பாகிஸ் தான் மறுத்து விட்டது. இது தொடர் பாக அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஜெஹாங்கீரகராமத் வோஷிங்ட னில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் :-

அணு விஞ்ஞானி காதிர்கானுக்கு உள்ள கள்ளச் சந்தை தொடர்பை கண்டுபிடித்து அதைத் துண்டிக்க நாங்கள் அமெரிக்காவுக்குப் போது மானளவு ஒத்துழைப்புக் கொடுத் தோம். இந்தப் பிரச்சினையில் ஏற்கன வே தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டாகி விட்டது. அதற்கு மேல் எதுவும் செய்வதற்கில்லை. பாகிஸ் தான் அதிகபட்சமாக ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறது என்பதை அமெரிக்கா உணர வேண்டும் இதற்த மேலும் அணு விஞ்ஞானியை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கக் கூடாது. அவரை ஒப்படைக்க முடியாது.

காதிர்கானை விசாரித்த போது கிடைத்த தகல்களை எல்லாம் நாங்கள் அமெரிக்காவுக்குத் தெரிவித்துவிட்டோம். சர்வதேச அணுசக்தி முகவருக்கும் தெரிவித்து விட்டோம்.

பாகிஸ்தான் அளித்த ஒத்துழைப் பினால் தான் அணுவாயுத கள்ளச் சந்தையை அமெரிக்காவில் ஒழிக்க முடிந்தது.அப்படி இருக்கும்போது அமெரிக்கர்கள்எங்களை விமர்சிப்பது நியாயமற்றது இவ்வாறு தூதர் ஜெஹாங்கீர் கூறினார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்க நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாகிஸ்தானை நமது தோழமை நாடு என்ற முறையில் அணுக வேண்டும். பாகிஸ்தானை குறிவைத்து விமர்சிப் பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பாகிஸ்தானின் நட்பு அவசியம். சிலதனிநபர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக் கலாம். அதை வைத்து பாகிஸ்தான் அரசே தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் அமெரிக்க நிர்வாகம் அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

## தீவிரவாதம் பரவுவதற்கு அமெ. அதிபர் புஷ் காரணம்

### சல்மான் ருஷ்டி

(லண்டன்)

முஸ்லிம்நாடுகளில் தீவிரவாதம் பரவியதற்கு புஷ் தான் காரணம் என்று சர்ச்சைக்குரிய முஸ்லிம் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி குற்றம் சாட்டியுள்ளார். ஜிஹாத்தை (புனிதப்போர்) உரு வாக்க பின்டேலன் எடுத்த முயற்சி யில் தோல்விதான் கிடைத்தது. ஆனால் அதை புஷ் வெற்றி பெறச் செய்து விட்டார் என்றும் கூறியிருக் கிறார்.இஸ்லாம் அமைதியை விரும் பும் மதமாகும் தீவிரவாதிகள் மதத்துக்கு எதிராக செயற்பட்டு வருகிறார்கள். இஸ்லாம் பொறுமைக்குப்பெயர் பெற்ற மதம். அதைப்பின்பற்றிய வர்கள் மத்தியில் தீவிரவாதத்தை உருவாக்க பின்லேடன் எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை.

ஆனால் அமெரிக்க சனாதிபதி புஷ்தான் பின்லேடனால் முடியாத தை செய்து முடித்து வெற்றி பெற்று இருக்கிறார்.இவ்வாறு சல்மான் ருஷ்டி கூறினார்.

## இந்தியர் ஈராக்கில் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் குறியேறிய இந்தியர் ஒருவர் அமெரிக்க இராணு வத்தில் சேர்ந்து ஈராக்கில் பணியாற் றிய போது அங்கு நடந்த சண்டை யில் கொல்லப்பட்டுள்ளார். இதை அமெரிக்க அரச அறிவித்துள்ளது.

டில்லியிலுள்ள அமெரிக்கத்தூதர் டேவிட்மல் போர்டு, அவரது மரணத் திற்கு தன் அனுதாபத்தை தெரிவித் துக்கொண்டுள்ளார்.

# திருமலை புறநகர் பகுதியில் நள்ளிரவில் படையினர் தேடுதல்

# இந்து ஆலயங்களுக்குள் சப்பாத்துக் கால்களுடன் பிரவேசம்

## கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள் சம்பந்தனிடம் எடுத்துரைப்பு

(திருகோணமலை)

**திருகோணமலை பட்டினமும் சூழல் பிரதேச செயலர் பிரிவில் உள்ள புற நகர் பகுதிகளிலும் இராணுவத்தினர் நள்ளிரவு வேளைகளில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இதன் போது இந்து ஆலயங்களுக்குள் சப்பாத்துக்களுடன் படையினர் பிரவேசிப்பதாகவும், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகிகள் கண்டித்துள்ளனர்.**

சங்கங்களின் சமாசக் கூட்டத்தில் பிரதம அதிதியாகப் பங்கு பற்றிய திருகோணமலை மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் கவனத்திற்கும் இதைக் கொண்டு வந்தனர். இக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திருகோணமலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

அன்புவழிபுரம் பகுதியில் படையினர் நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னரே தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதால் குடியிருப்பாளர்கள் அச்சத்துடன் வாழ வேண்டியிருப்பதாகவும், அப் பகுதிப் பிள்ளையார் ஆலயத்தினுள் சப்பாத்துக் கால்களுடன் படையினர் பிரவேசித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சங்கப் பிரதிநிதிகள் மேலும் கூறுகையில்;செல்வநாயகபுரம் பகுதியில் மின்விநி யோகம் கிடையாது. இராணுவத்தினர் வீதி சந்திகளில் இரவோடு இரவாக காவலுக்கு நிறுத்தப்படுகின்றனர். இதனால் குடியிருப்பாளர்கள் அவசர அலுவல்களுக்கு கூட வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இரவு வேளைகளில் இராணுவத்தினர் வீடு, வளவுகளுக் கூடாக சென்று தேடுதல் நடத்துகின்றனர். கடலோரமாக இரு புதிய காவலரண்களை படையினர் அமைத்துள்ளனர். கடற்றொழிலுக்கு மீனவர்கள் செல்வதைப் படையினர் தடுத்து வருகின்றனர். இரவு நேரங்களில் மின் வெளிச்சமில்லாத பகுதியில் படையினர் காவலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் மக்கள் வெளியில் நடமாடஅச்சப்படுகின்றனர். செல்வநாயகபுரம் பகுதி யில் தனது கடையை பூட்டி விட்டு இரவு வீடு திரும்பிய கடைச் சொந்தக் காரரை காவலில் நின்ற படையினர் தடுத்து வைத்து மறுநாட்காலையே வீடுதிரும்பு வதற்கு அனுமதித்தனர் எனவும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (25)

## பொன்னகர் கிராமத்தில் சமகால விழிப்புணர்வு ஆய்வுக் கருத்தமர்வு

(முள்ளியவளை)

கடந்த வாரம் முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட பொன்னகர் கிராமத்தில் சமகால விழிப்புணர்வு ஆய்வுக் கருத்தமர்வு இடம் பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வானது பொன்னகரில் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் புனரமைப்பு செய்யப்பட்ட மாலை நேர கல்வி நிலைய மண்டபத்தில் கிராமத்தலைவர் தங்க வேலாயுதம் தலைமையில் அக வணக்கத்துடன் ஆரம்பமானது.

1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போது கையில் அகப்பட்டதுடன் ஊரை விட்டு இடம் பெயர்ந்த தென்னமரவடி கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி ஆகிய கிராம மக்களின் குறைக்களைக் கேட்டறியும் முகமாகவும் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும், கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதில் தென்னமரவடி மக்களின் சார்பாக கணபதிப்பிள்ளை கருத்துத் தெரிவித்ததையடுத்து இன்றைய நிலைப்பாடு அடுத்த கட்ட நிலைப்பாடுகள் காலத்தின் தேவை போன்ற விடயங்களை உள்ளடக்கி முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ. முகுந்தன் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி ஆகிய கிராம மக்களின் பொறுப்பாளர் தயா கிராம அலுவலர் ஒளித் திலகன் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.சரவணன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் கனகரத்தினம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## துணுக்காய் கோட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

(துணு க்காய்)

துணுக்காய் கோட்டத்தின் தேசிய எழுச்சி பேரவையினரின் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. யோகபுரம் மகாவித்தியாலயத்தில் கோட்ட தேசிய எழுச்சி பேரவையின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் காலை 10 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரினை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பொறுப்பாளர் செல்வி சசி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் புனிதன் ஏற்றி வைத்தார். சிறப்புரையினை துணுக்காய் கோட்டக்கல்வி அதிகாரி சுந்தரமூர்த்தி, துணுக்காய் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் த. யோகானந்தராஜா, பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் பாவலன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட தேசிய எழுச்சி பேரவை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா


(அலுவலகசெய்தியாளர்)

வள்ளிபுனம் ராஜ்முன்பள்ளிக்குநிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது.

இந் நிகழ்வில்கட்டடத்திற்கான அடிக்கல்லினை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நாட்டி வைத்தார். முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள். நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். (தீ)

## காவல்துறையினரின் திடீர் குற்றத்தடுப்பு நடவடிக்கையில் பாரிய திருட்டுக்கள் கண்டு பிடிப்பு- சந்தேக நபர்கள் கைது

(முள்ளியவளை)



முள்ளியவளைப் பிரதேச தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வரும் குற்றத் தடுப்பு நடவடிக்கையின் போது பாரிய திருட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதியன்று முள்ளிய வளைப் பிரதேச காவல்துறைப் பொறுப்பதிகாரி ஜெயகரன், முதன்மை காவல்துறை உறுப்பினர் புலோமி ஆகியோரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மீதான தொடர் விசாரணை மூலம் சந்தேக நபரிடம் இருந்து பெருமளவான பொருட்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன.

தொடர் விசாரணைகளை தமிழீழகாவல்துறை மேற்பார்வையாளர் ரஞ்சித்குமார், முல்லை-காவல் பணிமனை பொறுப்பாளர் றோய்க்காந்த, முள்ளியவளைப் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் ஜெயகரன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

இத் தொடர் விசாரணை மூலம் நாளாந்தம் பெருமளவான மின் பிறப்பாக்கிகள், உழவு இயந்திரம் மற்றும் வாகன மின்கலங்கள், சூரியமின்கலங்கள் ஒலிபெருக்கித்தொகுதிகள், 1100 லீற்றர் நீர்த்தாங்கிகள் ஒலிபெருக்கிகள் உட்பட இன்னும் பல பொருட்கள் மீட்கப்பட்டு வருவதாக முள்ளியவளைப் பிரதேச காவல் துறைப் பொறுப்பதிகாரி ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்டு வரும் பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டும் ஏனைய பெருமளவான பொருட்கள் காவல்பணிமனையிலும் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேச காவல் பணிமனையினர் மேற் கொண்டு வரும் குற்றத்தடுப்பு நடவடிக்கையினையும் அதன் விளைவாக வியக்கத்தக்க இப் பாரிய களவுகளை கண்டு பிடித்தமையினையும் மக்கள் பாராட்டி நன்றியையும் தெரிவித்துள்ளதுடன் காவல் துறையினருக்கு ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## சுனாமி அகதிகளுக்கான புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள், வலைகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமிஅகதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள், வலைகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் மரியராசா தலைமையில்இடம்பெற்ற நிகழ்வில், மங்கல விளக்கினை வணக்கத்திற்குரிய யாழ் ஆயர் தோமஸ் சௌத்தரநாயகம் அடிகளார், முல்லைப் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் ஆகியோர் ஏற்ற,தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழக் கடற்படையின் முல்லை நகரத் தளபதி தினேஷ் ஏற்றினார்.

தலைமையுரையினை அடுத்து, கருத்துரைகளை கியூடெக் பணிப்பாளர் அருட்தந்தை பீற்றர், முல்லை பங்குத்தந்தை, -தமிழீழ கடற்படை முல்லை.நகரத்தளபதி தினேஷ், யாழ். ஆயர் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து 15 மீனவர்களுக்கான வலைகளையும்,44 மீனவர்களுக்கான படகுகளையும் யாழ். ஆயர் வழங்கி னார்.

இப் படகில் 20 படகுகள் ஹரிதாஸ் நிறுவனத்தினாலும் 24 படகுகள் கொலன் நாட்டு நிதியுதவியில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளது. கியூடெக் ஹரிதாஸ் நிறுவன நிதியுதவியில் இரண்டு கட்டடங்கள் வழங்கப்பட்டு மூன்றாம் கட்டமாக இந்தப்படகுகளும் வலைகளும் வழங்கப்பட்டன. (20)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேச காவல்துறையினர் மேற்கொண்டுவரும் குற்றத் தடுப்பு ரோந்து நடவடிக்கையின்போது 18 ஆம் திகதி முள்ளியவளை 4 ஆம் வட்டாரப் பகுதியில் கசிப்பு உற்பத்தியாளர் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பும், கோடாவும் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது 65 லீற்றர் கோடாவும் 2 1/2லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதுடன் உற்பத்தியாளரும் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக முற்படுத்தியுள்ளதாக பிரதேச காவல்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். (ஆ)

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டம் -2005 இற்கான உணவுப் போசாக்கு கருத்தூட்டல் நிகழ்வு

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலக பகுதிகளின் கிராமங்கள் தோறும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2005 இற்கான உணவுப் போசாக்கு கருத்தூட்டல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. முதல் நிகழ்வு ஊற்றுப் புலம் பொது நோக்கு மண்டபத்தில் 23 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி சு. சுலோஜினி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கு.தயாரட்ணகுணசிங்கமும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கா.சுஜந்தனும் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்கள்.

கருத்தூட்டல் நிகழ்வின் வள ஆளணியினராக பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். கதிர்செல்வன், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கா.சுஜந்தன், பொது சுகாதார பரிசோதகர் சோ. இரவிச்சந்திரன் விவசாயப் போதனாசிரியர் கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இதன் தொடர் நிகழ்வாக 25 ஆம் திகதி புது முறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், 26 ஆம் திகதி பாரதிபுரம் பொது நோக்கு மண்டபத்திலும், நேற்று மலையாளபுரம் பொது நோக்கு மண்டபத்திலும் இடம் பெற்றது. மூன்றாம் திகதி பொன்னகர் கிராம சேவகர் அலுவலக மண்டபத்திலும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படு- கின்றது. (தீ)

# தமிழீழமே எங்கள் மூச்சு

## தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனம்-கிளிநொச்சி மாவட்டம்




### சர்வதேசத்திற்கு குரல் கொடுப்போம். அனைவரும் அணி திரண்டு வாரீர்.




சிறிலங்கா அரசானது எமதுதமிழீழவிடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாடொன்று ஒப்புக் கொண்டு கைச சாத்திட்டு யுத்தம் நடைபெறாத இந்தநேரத்தில் அவசர காலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து எமது போராளிகளையும் பொது மக்களையும், கைது செய்வதும் போராளிகளின் பயணத்தின் போது இடை நிறுத்தி திருப்பி அனுப்புவதும் யுத்த நிறுத்தத்தை மீறும் செயலாகும். அத்தோடு போராளிகளின் செயலகங்கள் மீது குண்டெறிவதும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கையே ஆகும்.

இப்படியாக தமிழர்கள் ஆகிய எம்மீதான அடக்கு முறை இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளன.இந்தநேரத்தில் தமிழர்களாகிய நாம் எமது மக்களின் உயிர் இழப்புக்களையும் துன்ப துயரங்களையும், போர் இழப்புக் களையும் இனியும், சுமக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது தமிழர் தேசியம், தன்னாட்சி உரிமை, மரபு வழித் தாயகம் என்ப வற்றை சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்தி கிளிநொச்சியில் 01.09.2005 அன்று நடைபெறப் போகும் தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் ஜனநாயக வழியிலான மக்களின் உணர்வுகளின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி எமது 17000ற்கு மேற்பட்ட மாவீரர்களின் பேரால் எமது மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து மக்களும் கலந்து கொண்டு வவுனியாவில் நடந்த பேராளர் மாநாட்டின் பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் எமது எழுச்சிப் பிரகடனத்தை வெளியிட்டு சர்வதேசத்திற்குகுரல் கொடுப்போம் அனைவரும் திரண்டு வாரீர்.

ப.நாகேந்திரம்,
செயலாளர்,
தேசிய எழுச்சிப் பேரவை- பரந்தன்.


### உரிமைப் பிரகடனம் செய்ய ஒன்று சேருவோம்.



தமிழர்கள்மீதான அடக்குமுறையின் காரணமாகத் தோன்றிய விடுதலைப் போராட்டம் தற்போது சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள இந்த வேளையில் கடந்த காலப் போரின் இழப்புக்களையும், துன்ப துயரங்களையும் தொடர்ந்தும், இனி வருங் காலங்களில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் சுமக்கத் தயாரில்லை என்பதையும் தமிழரின் தேசியம், தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம், என்பவற்றை சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்தி எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள ஜனநாயக வழியிலான மக்களின் உணர்வுகளின் உள்ளக் குமுறலின் வெளிப்பாட்டு நிகழ்வில் தமிழ்பேசும் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த மண்ணில் ஆகுதியாகிய ஆயிரமாயிரம் உறவுகளின் பேரால் அனைத்து மக்களும் கலந்து உரிமைப் பிரகடனம் செய்வோமாக.

தி. அபராஜிதன் ,
பொருளாளர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி.

### எங்கள் உரிமைகளை வென்றிட ஓரணியில் திரள்வோம்.



எங்கள் உரிமைகளை வென்றெடுக்கவும், எங்கள் உணர்வு களைச் சர்வதேசத்திற்கும் எதிரி தேசத்திற்கும் வெளிப்படுத்தி போரினால் எங்கள் தேசமும், எங்கள் மக்களும், குறிப்பாக பெண்கள் மீதான கொடிய வன்முறைகளைப் புரிந்து வரும் எதிரியின் கையாலாகாத்தனங்களை இனியும், ஏற்பதற்கு நாம் தயாரில்லை என்ற உண்மை நிலைப்பாடுகளை இடித்துரைக்கும் உணர்வு மிகு தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் அனைவரையும் 01.09.2005 இல் கிளிநொச்சியில் அணி திரளுமாறு நேசக்கரம் பற்றி அழைக்கின்றோம்.

ராஜன்
பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு
எதிராக குரல்கொடுக்கும் ஆண்கள் குழு.
கிளிநொச்சி.

### எதுவரைஇந்த நெடுமூச்சு

குட்டிக்குனிந்து
குமுறிய மனதினை
காற்றினுள் புதைத்து
ஒட்டிய வயிறொடு ஓவென்றழுதிட
ஓடிய நாட்களை எப்படி மறப்பது

குளங்கள் முட்டியிருந்தன
வயல்கள் வெட்டியிருந்தன
மாடுகள் பட்டியிருந்தன-எங்கள்
வயிறுகளோ ஒட்டியிருந்தன

வறுமை வாசல் தாண்ட மறுத்ததால்
ஊருக்கு வந்து எத்தனை பேர்
சடலங்களாய் ஆயினர்.

முந்தையர் கூனிய முதுகினை நிமிர்த்தி
எம்மவர் ஏறி நடந்திடும் காலத்தை
தந்தான் தமிழர் தலைவன்
ஆனையிறவில்தலைவைத்து-எம் மண்ணில்
அட்டணைக்கால் போட்டவர் போயினர்
வானை மேவி வந்து
வாலை ஆட்டியோர் சிதைந்தனர்

ஆனையிறவை கையிலேந்திய
பெருமையுடனும் அடங்காத் திமிருடனும்
உலவும் என் சனமே
எங்கள் தாயக விடுதலை வரை செல்வோம்

இனியும் இழப்போமா
எம் அழகிய நிலத்தை,
அழகிய வாழ்வை,
குழந்தைகளின் மழலைக் கனவுகளை.

எதுவரை நீளும் ஏமாற்றங்கள்
எதுவரை நீளும் பெருமூச்சுக்கள்
எதுவரை நீளும் அங்கலாய்ப்புக்கள்.

நினைவுகள் எல்லாம்
கனலும் நெருப்பு மனங்களை
உலகிற்கு காட்டுவோம்.

எம் இலக்கு ஒன்றே
கனவுகள் ஒன்றே
தலைவன் ஒன்றே
தாகம் ஒன்றே
அந்த விடுதலை ஒன்றிற்காய்
ஒன்றுபட்டு
செப்ரெம்பர் ஒன்றில்
ஒன்று கூடுவோம்
உலகிற்கு உரக்கக் கூவுவோம்.
எம் வேட்கைஎல்லாம்விடுதலைஎன்றே.

அநாமிகன்

### கசங்கிப் போகும் நம்பிக்கைகளின் முடிவில்

நண்பர்களேநமக்கிடையில்
எழுப்பப்படும் சுவர்களுக்கு
எவ்வகையில் பாத்திரமாக முடியும்
நாங்கள் சமானமாய்
நடத்தப்பட வேண்டுமென்று நம்புவதில்
எப்படி அபத்தமிருக்கமுடியும்.
மலைகளின் உச்சிகளில் தெறிக்கும்
சூரியன்களைக் களவாடிப் போகின்றனர்
உங்கள் கறைபடிந்த
வார்த்தைகள்
மடியிறங்கிப் போகும் நதிகளில்
நுரைகளிலும், அதிகமாய் கொப்பளிக்கின்றன.
உங்கள் இனவாதக் புலம்பல்கள்
வீசும் காற்றும்
கவியும் மேகமும், உயரும் பனைகளும்
இசைக்கும் பறவைகளும்
எமது தீவின் அத்தனையும்
நம்மைப் பிரித்துப் பார்த்ததேயில்லை.
வாழேந்திய சிங்கங்களின் கர்ச்சிப்பில்
கசங்கிப் போகின்றது நம்பிக்கையின் கீற்று
தெற்கின்
நண்பர்களே
நமக்கென நாமே எழுதும் வரிகளை படிக்க அதிக காலம்
காத்திருக்கத் தேவையில்லை நீங்கள்

திருநகரூர் ஜெகா.

தொகுப்பு:- கனகபுரச்சோதி

### மக்கள் சக்தியை வெளிப்படுத்துவதே இவ்வெழுச்சிப்பிரகடனத்தின் நோக்காகும்



காலம் காலமாக நசுக்கப்பட்ட எம் மக்களின் உரிமைப் பிரகடன மாகவே நாம் இதைக் கருதுகின் றோம். சிங்களப் பேரினவாத அரசின் தொடர்ச்சியான புறம் போக்கு நிலைமைக்கு முற்றுப் புள்ளிஒன்று வைக்கப்பட வேண் டும். நாம் எமது மண்ணில் சுதந்திரமாக எமது குடியுரிமை, மொழியுரிமை, தன்னாட்சி யுரிமை, என்பவற்றைப் பெற்று சுதந்திரமாக வாழ சர்வதேச சமூகத்திடம் அறைகூவல் விடுக்கின்ற நாளாக செப்ரெம்பர் 1 ஆம் நாளை பிரகடனப்படுத்த விரும்புகின்றோம். மக்களும், விடுதலைப்புலிகளும் வேறானவர்கள் அல்ல என்பதை எம் மக்கள்அனைவரும் ஒன்று திரண்டு ஒருமித்த குரலால் உணர்ச்சி பூர்வமாக உலகிற்குரைத்து அவர்கள் இதயக்கதவுகளை திறக்கச் செய்வதூடாக சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுத்து எமது தமிழீழ தேசத்தின் மாபெரும் மக்கள் சக்தியை வெளிப் படுத்துவதே இவ்வெழுச்சிப்பிரகடனத்தின் நோக்காகும்.

எமது மண்ணின் விடுதலை வரலாற்றில் எத்தனையோ இடப் பெயர்வைச் சந்தித்த எம் மக்கள் மீண்டும் ஒரு இடப் பெயர்வை எதிர்கொள்ள விரும்பாத ஒரு இடப்பெயர்வாக செப் ரெம்பர்-01இல் ஒன்று திரண்டு சர்வதேச சமூகத்திற்கு விடுக்கப் போகின்ற செய்தியானது தமிழினத்தின் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

*த.கண்ணபிரான்*
*அதிபர்*
*கிளி.முட்கொம்பன் அ.த.க பாடசாலை.*

### அனைவரும் அணி திரண்டு எமது விடுதலை உணர்வை உரத்துக் கோசிப்போம்

***எமது தாயக மண்ணில் எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கும் வவுனியா மாநாட்டுக்கு வலுச்சேர்த்து மரபுவழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் உலகமே எமது இறைமைக்கான போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டி 01.09.2005 இல் கிளிநொச்சி மாநாட்டில் அனைவரும் அணி திரண்டுஎமது உள்ளத்து விடுதலை உணர்வை உரத்துக் கோசிப்போம்.***

*"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"*

*தேசிய எழுச்சிப் பேரவை,*
*வட்டக்கச்சிப் பிரதேசம்.*




### எமது குரலை சர்வதேச சமூகத்திற்கு ஒலிக்கச் செய்வோம்

தமிழ் மக்களாகிய நாங்கள் கடந்த காலப் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தில் எதுவித தீர்வுகளும் ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளோம். இதனால் தமிழ் மக்கள் எழுச்சி கொண்டு எமது குரலை சர்வதேச சமூகத்திற்கு ஒலிக்கச் செய்கின்றோம். தமிழ் மக்களது அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வினை முன்வைப்பதற்கு சிறிலங்கா அரசாங் கத்திற்கு அழுத்தம் கொடுக்க செப்ரெம்பர் முதலாம் திகதி அனைவரும் அணி திரண்டு தமிழ்தேசிய பேரெழுச்சி மாநாட்டிற்கு வருகை தருமாறு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு ஒன்றியம் அறை கூவுகின்றது.

*பெண்கள் மேம்பாட்டு ஒன்றியம்,*
*கிளிநொச்சி.*

*காலம்:- 01.09.2005*
*(வியாழன்)*
*நேரம்:- பி.ப 3.00 மணி*
*இடம்:- பொது விளையாட்டு*
*மைதானம் கிளிநொச்சி.*

# கேள்விக்கு உள்ளான நிலையில் யுத்த நிறுத்த உடன்பாடு!



விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டதான யுத்தநிறுத்தம் அரசாங்கத் தரப்பில் இன்னமும் கடைப்பிடிக்கப்படுகின்றதா? யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளோ அன்றி தமிழ்மக்களோ பணிகள் எதையும் ஆற்றமுடியுமா?

யுத்தநிறுத்த உடன்பாட்டில் அரச தரப்பில் எஞ்சிவிடப்பட்டுள்ள பகுதி நேரடியாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடாமை என்பதும், போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரை வெளியேறுமாறு கோரவில்லை என்பதுமே ஆகும். இதேவேளை கண்காணிப்புக்குழுவின் நிலையோ செயற்படுவதும் ஒன்று. செயற்படாமல் இருப்பதும் ஒன்று, என்ற நிலையிலேயே உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கடந்த ஆண்டின் தொடக்கத்தில் கவிழ்த்த சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணி இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை எதையும் நடத்துவதுவதற்குத் தயாராக இருக்கவில்லை. ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த காலத்தில் இருந்து இம் முயற்சி கைவிடப்பட்டதொன்றாகவே இருந்தது.

ஆனால் யுத்தநிறுத்த உடன்பாட்டு விடயத்தில் அது போலியானதொரு நிலைப்பாட்டை வெளிக்காட்டி வந்தது. வெளிப்படையாக யுத்த நிறுத்தம் பற்றி பேசிக் கொண்டிருப்பினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான மறைமுகப் போர் ஒன்றை அது நடத்தியது. தமிழ் தேச விரோதக்குழுக்களின் பெயரில் இவ் நிழல் யுத்தத்தை நடத்திய சந்திரிகா அரசாங்கம் படிப்படியாக யுத்தநிறுத்தச் சூழலை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகயில் ஈடுபட்டுவந்தது.

விடுதலைப்புலிகளுக்கும்- சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு என்பது தனியாக இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை நிறுத்துதல், மோதல்களைத் தவிர்த்தல் என்பது மட்டுமல்ல. உடன்பாட்டில் ஒருபகுதியாக இயல்பு வாழ்க்கை மீளக்கொண்டுவருதல் என்பதும் அடங்கும்.

அதாவது இராணுவரீதியிலான செயற்பாடுகளை நிறுத்தி-மக்களின் இயல்புவாழ்க்கையை மேம்படுத்துதல் மூலம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கி முன்னேறிச் செல்வதே உடன்பாட்டின் நோக்கமாகும். அதாவது யுத்த நிறுத்தம் என்பது இனப்பிரச்சினைத் தீர்வுநோக்கி முன்னேறிச் செல்வதற்கான அடிப்படையாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமானது இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துதல் என்ற விடயத்தில் உடன்பாட்டிற்கு முற்றிலும் மாறானதொரு நிலைப்பாட்டுடன் செயற்பட்டது என்றே கூறமுடியும். சுருக்கமாகச் சொன்னால் யுத்தநிறுத்த உடன்பாட்டில் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துதல் தொடர்பான விடயத்தில் ஒத்துழைக்க அது தயாராக இருக்கவில்லை என்றே கூறமுடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவிக்கு வந்ததில் இருந்து இராணுவ ரீதியில் படிப்படியாகச் சிறிலங்கா இராணுவத் தரத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த யுத்தநிறுத்த மீறல்கள் விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலையுடன் உச்சக்கட்டமொன்றை எட்டியது.

இதேவேளை அண்மையில் நிகழ்ந்த சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைகூட மறைமுகப்போரின் உச்சக்கட்டம் என்றே பல அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். யுத்தநிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த போதும் அந்த அளவிற்கு அரசாங்கம் ஆரம்பித்த நிழல் யுத்தமானது தாக்கத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது.

ஆனால் இந்த நிழல் யுத்தமானது யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு உட்பட்டதானதாக வரையறுக்க முடியாத நிலையே உள்ளது. இதனை நன்கு உணர்ந்தே அரசாங்கம் இவ் நிழல் யுத்தத்தை ஆரம்பித்தது. அதாவது மறைமுக யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை யுத்தத்தின்விளிம்பிற்கு இட்டுச்செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

இராணுவ ரீதியில் யுத்த நிறுத்ததிற்கு எதிரான வகையில் நிழல் யுத்தத்தை முனைப்புப்படுத்தியிருந்த அரசாங்கம்- மறுபுறத்தில் அதாவது இயல்பு வாழ்வை தோற்றுவித்தல் என்ற விடயத்திலும் பெரும் இடையூறு விளைவிக்கும் வகையிலான நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தது. இந்த வகையில் விடுதலைப்புலிப் போராளிகளின் போக்குவரத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமை; இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணிக்கு இடையூறு விளைவித்தமை மக்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறு விளைவிப்பதுபோன்ற நடவடிக்கைகளிலேயேஅக்கறை காட்டுவதாக இருந்தது.

அதாவது விடுதலைப்புலிகளின் நடமாட்டம், அரசியல் பணி, பாதுகாப்பான போக்குவரத்து என்பன யுத்தநிறுத்த உடன்பாட்டில் உறுதி செய்யப்பட்டவையாக இருந்தன. ஆனால் சிறிலங்கா இராணுவம் இவ்விடயத்தில் போட்ட முட்டுக்கட்டைகள் ஒப்பந்த சரத்துக்களைப் பயனற்ற விதத்தில் ஆக்குபவையாக இருந்தன.

இதேவேளை மக்களின் இயல்பு வாழ்வுக்கு முட்டுக்கட்டை போடுதல் என்ற விவகாரம் மக்களை மீளக் குடியேறுவதற்கு அனுமதி மறுத்தல், கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்காமையில் இருந்து அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாமை வரையில் பல விடயங்கள் இருந்தன. இவற்றின் விளைவானது இயல்புவாழ்க்கை என்பதையே முற்றிலுமே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அதாவது யுத்த நிறுத்த உடன்பாடு பெற்றுத்தருமென எதிர்பார்த்த நிம்மதியான வாழ்வு சாத்தியமற்றதொன்றாகியுள்ளது.

இந்த வகையில் அரசாங்கம் தொடங்கிவைத்த மறைமுகப்போர் அரசு யுத்தநிறுத்தச் சரத்துக்களை நிறைவேற்றாமை, யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு மாறான/ எதிரான நடவடிக்கைகள் என்பனவற்றின் உச்சவிளைவாக வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலை அமைந்ததென்பது அரசியல் நோக்கர்களின் கணிப்பீடு.



ஆனால் கதிர்காமரின் கொலையானது அரசாங்கத்தின் எண்ணப்பாடுகளையும் மீறியதான தொன்றாக அமைந்தது என்பது வெளிப்படையானது. இந் நிலையில் அரசாங்கம் மற்றுமொரு கட்டத்திற்கு நகர்ந்துள்ளமையே அவசரகாலச் சட்டப் பிரகடனம் ஆகும்.

இவ் அவசரகாலச்சட்டமும், யுத்த நிறுத்த உடன்பாடும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவை. அதாவது அவசரகாலச்சட்டம் யுத்தநிறுத்த உடன்பாடுகளால் முக்கிய பகுதியில் ஒன்றாகிய மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு முற்றிலும் மாறானதாகும்.

இந்த வகையில் அவசரகாலச் சட்டமானது யுத்தநிறுத்த உடன்பாடு அமுலில் இருப்பதையே கேள்விக்குள்ளாக்கியது எனலாம். அதாவது படிப்படியாக பலவீனப்படுத்தப்பட்டு வந்த யுத்தநிறுத்த உடன்பாட்டை அவசரகாலச்சட்ட அமுலாக்கம் முற்றிலுமாக பயனற்றதாக்கியுள்ளது.

அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்படும் முன்பாகவே வீதிச் சோதனைகள், புதிய காவலரண்கள் அமைத்தல் என்பவை முனைப்புப்படுத்தப்பட்டவையாக இருந்தன. ஆனால் அவசரக்காலச்சட்டத்தின் பின்னர் சுற்றிவளைத்தல், வீடுவீடாகத் தேடுதல்கள், கைதுகள் என்பன மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் போராளி கோபியின் கைது கூட அமைந்ததெனலாம். இந்த வகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பலவீனப் படுத்துவதாகவும்-யுத்த நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் அமைவதாக இருந்த போது விடுதலைப்புலிகள் இவை குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பினரின் கவனத்திற்கும் கொண்டு வந்தனர்.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் உறுப்பினர் கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியில் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும், விடுதலைப்புலிப் போராளிகளின் போக்கு வரத்துத் தொடர்பான பிரச்சினைகளும் சுட்டிக்காட்டப்பட்டன. அத்தோடு இந்நிலை நீடித்தால் யுத்தநிறுத்தம் முறிவடைய வாய்ப்புள்ளது எனவும் புலிகளால் எச்சரிக்கவும்பட்டது.

இதேசமயம் விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்மேற்க்கொண்டு வந்த அரசியல்பணிகள் பல இடங்களின் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலையை அடைந்தது. இதற்குப் போராளிகளின் பாதுகாப்பு காரணமாகியது. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டுச் சரத்துக்கள் பல வலுவிழந்தவையாகின.

சுட்டிக்காட்டப்பட்டபோதும் அரசாங்கத்தரப்பு இவ்விடயத்தில் போதிய சிரத்தைக் காட்டியதாக இல்லை. நோர்வேத் தரப்பு இவ்விடயத்தில் கரிசனை கொண்டு முயற்சிகள் சிலவற்றை மேற்கொண்டிருந்த போதும் அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எதற்கும் தயாராக இருக்கவில்லை.

இந்நிலையில் இடம்பெற்றுள்ள கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது, யுத்தநிறுத்தத்தை முற்றிலுமே இல்லாது ஒழித்துவிடும் ஒன்றாகியுள்ளது. அதாவது அரசாங்கம் பிறப்பித்துள்ள அவசரகாலச்சட்டமானது யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளைச் செயலற்றதாக்கியுள்ளதோடு, எவ்வேளையிலும் எத்தகைய அசம்பாவிதங்களுக்கும் இடமளிக்கும் ஒன்றாகியுள்ளது.

வேறுவிதமாகக் கூறுவதானால் விடுதலைப்புலிகள் இயக்கத்தை யுத்தத்தின் முனையில் கொண்டுவந்து நிறுத்துவதாகவுள்ளதெனலாம். இதேவேளை கதிர்காமரின் மரணத்தைத் தொடர்ந்து யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தை மேம்படுத்தல் தொடர்பாக ஒஸ்லோவில் நடத்துவதற்கு ஏற்பாடாகிய பேச்சுவார்த்தையும் வெளிநாடுகளில் பேசப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டினால் முடக்கத்திற்கு உள்ளாகியுள்ளது.

இதேசயம் சிறிலங்காவில் அடுத்த சனாதிபதித்தேர்தலுக்கான ஏற்பாடுகளில் தீவிரம் காட்டப்படுவதினால் அண்மையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்களும் இல்லாது ஒழிந்து போயுள்ளன. ஏனெனில் பேரினவாதிகளின் அரசியல் களம் இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறு முன்னேற்றத்திற்கும் இடமளிக்க மாட்டாது என்பது கடந்தகால அனுபவமாகும்.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விவகாரமோ, அன்றி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை விவகாரமோ, அன்றி சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விவகாரமோ மட்டுமல்ல. யுத்தநிறுத்த உடன்பாட்டை மேம்படுத்துதல் தொடர்பான விடயத்தில் கூட சிங்களப் பேரினவாதம் அக்கறை காட்டப் போவதில்லை. அதாவது யுத்த நிறுத்தம் உட்பட யாவும், அனாதரவாக விடப்பட்டவையாக உள்ளன. தற்போதைய நிலையில் அவசரகாலச்சட்டத்தை மட்டும் கையில் வைத்துக்கொண்டு தமிழ்மக்கள் தொடர்பான விவகாரங்கள் யாவற்றையும் அரசு கைகழுவியுள்ளது.

*ஜெயராஜ்*




**22.08.2005**
**28.08.2005**

22

➪ பெண்கள் அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனத்தின் மன்னார், பேசாலை பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிபெற்று வந்த 13 மாணவிகள் சிறிலங்காக் கடற்படையினரால் கைது.

➪ திருகோணமலை மூன்றாம் கட்டைப் பகுதியில் கைக்குண்டொன்று வீசப்பட்டதில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் காயம்.



➪ சிறிலங்காவின் புதிய வெளி விவகார அமைச்சராக அநுரா பண்டார நாயக்க பதவிப் பிரமாணம்.

➪போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் அரச சமாதான செய லக பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்ண வுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தினார்.

23

➪ ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில்விக்கிமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கொழும்பிலுள்ள பிரதான பாடசாலை உட்பட முக்கிய இடங்கள் சிலவற்றை ஒளிப்பதிவு செய்ததாக தமிழர் ஒருவரை கறுவாத்தோட்ட பொலிசார் கைது செய்தனர்.

➪ சேதுசமுத்திரத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்கு முன் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

➪கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற ஜே.வி.பி.யின் ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச்சென்ற சுடரொளி பத்திரிகையாளர் ஜே.வி.பி உறுப்பினர்களால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார்.

➪ திருகோணமலை மாவட்டத்தில் நித்தியபுரி கிராமம் படையினராலும், பொலிசாராலும் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

➪இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே வட்டக்கண்டலிலுள்ள புலிகளின் மன்னார் மாவட்ட செயலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

➪போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவுக்கும் படைஅதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் திருகோணமலை நகரிலிருந்து படையினரின் எண்ணிக்கையைக்குறைக்க முடியாதென இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிடம் படைத்தரப்பு தெரிவிப்பு.

24

➪ ஓமந்தை அரசன் குளத்தில் படையினர் சோதனை நிலையமொன்றை அமைத்து ஏ-9 வீதிஊடாகப்பயணிக்கும் பொதுமக்கள் மீது அடையாள அட்டைப்பதிவு, சோதனை ஆகிய கெடுபிடிகளை மேற்கொண் டனர்.

➪ வவுனியாவில் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➪திருகோணமலை மாவட்டம் சேருநுவரப் பகுதியில் உந்துருளியில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் சிறிலங்காப் பொலிசாரால் கைது.

➪அரச சமாதான செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் யாழ்ப்பாண போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்று கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

➪ பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவது மற்றும் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாகக்கடைப்பிடிப்பது என்பன தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் வூட்டர் வில்சன் பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவான்ஸ் ஆகியோருடன் பேச்சு நடத்தினர்.

25

➪ஓமந்தை சோதனைச்சாவடியில் இராணுவத்தினரின் கெடுபிடி காரணமாக விபத்தில் காயமடைந்து மேலதிகசிகிச்சைகென எடுத்துச் செல்லப்பட்டவர் மரணம்.

➪ சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அநுராபண்டாரநாயக்க உத்தியோகபூர்வ விஜமாக புதுடில்லி பயணம்.

➪ பண்டாரவன்னியனின் 202ஆவது ஆண்டு வெற்றிவிழா கற்சிலைமடுவில் நடைபெற்றது.




26

➪ விடுதலையின் அர்த்தம் செறிந்ததாக எமது சமூகத்தின் இந்தத் தலைமுறையை வளர்த்தெடுப்போம் இதுவே எமது தலைவரது சிந்தனையின் வெளிப்பாடு என சிறுவர் பூங்காக்களின் ஆசிரியர்கள் பராமரிப்பாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சிப்பட்டறை ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.



➪சிறிலங்காவின் அடுத்த சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டிலேயே நடைபெறவேண்டும் என சிறிலங்காவின் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



➪தமிழ் ஊடகங்களின் பணிமனைகள் தாக்கப்படுவது, ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவதையும் கண்டித்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.





➪ மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் நீர்கொழும்பில் வைத்து ஆயுதக்குழுவினரால் கடத்தல்.

➪சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் மகிந்தராஜபக்ஷவிற்கு மிடை யில் முக்கிய சந்திப்பொன்று சனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

27

➪ சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயமாக சீனா பயணம்.

➪ மாவீரர் லெப்.கேணல் ராஜன் அவர்களின் 13ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதன் போது தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் 50 ஆவது அகவையினையொட்டி தேசியத் தலைவர் பற்றிய போராளிகளின் ஆக்கங்களைத்தாங்கி உருவான பொன்னகவை மலர்வெளியிட்டு வைக்கப்பட்டது.



➪ திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தில் சிறிலங்கா இராணுவத்திற்குத் தகவல் கொடுக்கும் சிங்கள நபர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

➪ மட்டக்களப்பு திமிலதீவிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டு வீச்சில் வீட்டிலிருந்த மூவர் படுகாயமடைந்தனர்.

28

➪ கொழும்புகளுபோவிலவில இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் தமிழ் இளை ஞர் ஒருவர் பலி.

➪ மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிப்புற்ற பகுதிகளை உள்நாட்டு வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் புனரமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள், அரச பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கரடியனாறு தேனகத்தில் கலந்துரையாடினர்.

# தமிழீழ கடற்படையின் துணைப்படை 2 ஆவது அணி ஆழியவளையில் பயிற்சி முடித்து வெளியேறியது



தமிழீழ கடற்படையின் துணைப் படைப்பயிற்சிகள் நான்கு பாசறைகளில் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் நூறுபேரைக்கொண்ட இரண்டாவது அணி முழுமையான இராணுவப்பயிற்சிகளை முடித்து நேற்று முன்தினம் வெளியேறியுள்ளது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் இரண்டாவது பயிற்சி அணி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இதில் தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை, புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கடற்படைத் தளபதிகளில் ஒருவரான விநாயகம், வடமராட்சிக்கிழக்கு கடற் புலிகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பேசிய சிறப்புத் தளபதி கேணல் சூசை, சிறிலங்கா அரசின் கொடுமைகளுக்கு எதிராகப் போரைத் தொடங்கவேண்டும் என்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கு வேண்டுகை விடுத்த மக்கள் படைப்பலத்தைப் பெருக்கும் வகையில் தாமே போர்ப் பயிற்சிகளைப் பெறுகிறார்கள் என்றார்.

தாயக விடுதலைப்போராட்டத்தை விரைவுபடுத்தி விடுதலையை வென்றெடுக்க இந்தப்பயிற்சிகளைப் பெற்றுள்ளவர்களுக்குத் தனது பாராட்டுக்களை கேணல் சூசை தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் நான்கு பாசறைகளில் தமிழீழ கடற்படை துணைப்படை பயிற்சியை மக்கள் பெற்று வருகின்றனர்.

ஏற்கனவே நூறு பேர் கொண்ட அணி துணைப்படைப் பயிற்சிகளை முடித்து வெளியேறி யுள்ளது.

வடமராட்சியியைச்சேர்ந்த நூறு பேர் கொண்ட மற்றொரு அணி பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றது.

வடமராட்சிகிழக்கு மக்கள் மூன்று பாசறைகளில் துணைப் படைப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். இதில் ஒரு பாசறையில் நேற்று முன்தினம் ஒரு அணி பயிற்சிகளை முடித்துள்ளது. தொடர்ந்து பாசறைகளில் வடமராட்சி கிழக்கில் துணைப்படைப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றன்றனர்.

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் கரத்தைப் பலப்படுத்தி வெற்றியை விரைவுபடுத்த தாம் தயாராக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நாம் நிம்மதியாக நமது நிலத்தில் வாழ எமது மண் மீட்கப்படவேண்டும். அதனை முதலில் நாம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.





# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/தெ/3464 திருமதி.செல்வரத்தினம் இரத்தினசபாபதி.
யா/தெ/3494 திரு.தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை.
யா/தெ/3501 திரு.இராசையா நாகேந்திரன்.
யா/தெ/3508 திருமதி.செல்வலட்சுமி இராசரத்தினம்.
யா/தெ/3518 திரு.திருநாவுக்கரசு குணரத்தினம்.
யா/தெ/3530 திருமதி.தர்மவதி குமாரசுந்தரம்.
யா/தெ/3544 திரு.கந்தையா சச்திதானந்தம்.
யா/தெ/3545 திரு.வையிரப்பிள்ளை நாகலிங்கம்.
யா/தெ/3547 திரு.சின்னத்தம்பி சிவகுருநாதன்
யா/தெ/3578 திரு.தம்பு இராசலிங்கம்.
யா/தெ/3579 திரு.செல்லப்பா பஞ்சலிங்கம்.
யா/தெ/3580 செல்வி.இந்திரா சின்னத்தம்பு.
யா/தெ/3583 திரு.சின்னையா அழகரத்தினம்.
யா/தெ/3589 திரு.வல்லிபுரம் செல்வநாயகம்.
யா/தெ/3595 திரு.சோமசுந்தரம் இராமநாதன் ஞானசுந்தரம்.
யா/தெ/3596 திருமதி.நாகம்மா தம்பியப்பா.
யா/தெ/3597 திரு.நன்னியர் வேலுப்பிள்ளை.
யா/தெ/3608 திரு.பெரியான் பூதன்.
யா/தெ/3623 திருமதி.இராஜேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/தெ/3626 செல்வி.கௌரி நவரத்தினம்.
யா/தெ/3644 திருமதி.சின்னம்மா செல்லத்துரை.
யா/தெ/3645 திரு.ச்ாமிநாதர் சபாநாயகம்.
யா/தெ/3650 திரு.வினாசித்தம்பி சின்னத்தம்பி.
யா/தெ/3668 திரு.சின்னப்பு சேனாதிராசா.
யா/தெ/3685 திருமதி.லூர்த்தம்மா லீனப்பு.
யா/தெ/3690 திருமதி.இராஜலட்சுமி கந்தையா.
யா/தெ/3695 திரு.இளையதம்பி சின்னத்துரை.
யா/தெ/3702 திரு.தேவசகாயம் யோசேப்பு.
யா/தெ/3703 திருமதி.செபமாலையம்மா மடுத்தீன்.
யா/தெ/3706 திருமதி.முத்துப்பிள்ளை வல்லிபுரம்.
யா/தெ/3708 திருமதி.பொன்னம்மா வினாயகமூர்த்தி.
யா/தெ/3710 திருமதி.செல்லம் சிவசிதம்பரம்.
யா/தெ/3711 திருமதி.ஜெயா பரஞ்சோதி.
யா/தெ/3747 திரு.தம்பாபிள்ளை சுப்பிரமணியம்.
யா/தெ/3759 திரு.பொன்னம்பலம் செல்வநாதன்.
யா/தெ/3763 திரு.இராசா கிருஷ்ணமூர்த்தி.
யா/தெ/3767 திரு.சூசைப்பிள்ளை நீக்கிலஸ்.
யா/தெ/3770 திரு.நிக்கேல்பிள்ளை ஜோன் அல்பிறட் இராசதுரை.
யா/தெ/3798 திரு.திருவம்பலம் வன்னியசிங்கம்.
யா/தெ/3803 திருமதி.சரஸ்வதி வைரமுத்து.
யா/தெ/3808 திருமதி.அன்னம்மா நவரத்தினம்.
யா/தெ/3815 திரு.சூசைப்பிள்ளை மனுவேல்பிள்ளை.
யா/தெ/3823 திருமதி.பாக்கியம் கனகரத்தினம்.
யா/தெ/3842 திரு.பூதன் மருதன்.
யா/தெ/3857 திரு.சுப்பையா இரத்தினஐயர்.
யா/தெ/3859 திரு.செல்லையா சின்னத்துரை.
யா/தெ/3864 திருமதி.நாகம்மா அருளம்பலம்.
யா/தெ/3868 திரு.வைரவி மார்க்கண்டு.
யா/தெ/3895 திருமதி.சிவமணி தாமோதரம்.
யா/தெ/3896 திரு.குழந்தைவேலு கந்தையா.
யா/தெ/3909 திரு.முருகேசு அப்பாத்துரை.
யா/தெ/3927 திருமதி.மனோன்மணி இளையதம்பி.
யா/தெ/3933 திருமதி.இரத்தினம் சிங்கராசா.
யா/தெ/3940 திருமதி.மாரிமுத்து அப்புத்துரை.
யா/தெ/3955 திரு.தம்பர் கணபதிப்பிள்ளை.
யா/தெ/3964 திரு.கந்தையா கிருஷ்ணபிள்ளை.
யா/தெ/3994 திரு.சின்னத்தம்பி வினாயகமூர்த்தி.
